573

அகஸ்தியர் பேரில்

திர்காலருக்கைப் பாடல்கள்

(46)

ACL - THAL
00080

R4
N26
118069
~~117138~~

573

MORAL LESSONS

BOOK I

FOR USE IN ELEMENTARY SCHOOLS

OFFICE OF THE R...
29 JAN 192
MADRAS

நல்லொழுக்கப் பாடங்கள்

முதல் புத்தகம்

எலிமெண்டரி பாடசாலைகளில் உபயோ
கிக்கத் தக்கவை

By

PETER ALOYSIUS

CHINGLEPUT:
PRINTED AT ST. JOSEPH'S ORPHANAGE PRESS

Rights Reserved:] 1926. [Price As. 3

MORAL LESSONS

BOOK I

FOR USE IN ELEMENTARY SCHOOLS

...ICE OF THE REG... MADRAS
29 JAN 1926

நல்லொழுக்கப் பாடங்கள்

முதல் புத்தகம்

எலிமெண்டரி பாட சாலைகளில் உபயோ
கிக்கத் தக்கவை

By

PETER ALOYSIUS

CHINGLEPUT:

PRINTED AT ST. JOSEPH'S ORPHANAGE PRESS

Rights Reserved:] 1926. [Price As. 3

முகவுரை.

ஒரு எலிமென்டரி பாடசாலைக்கும் எனக்கும் சில காலமாக ஏற்பட்டுள்ள சம்பந்தத்தினால் நான் அடைந்த அநுபோகத்தில், சிறுவர்களிடத்து இயற்கையாகக் காணப்படும் பொய், பெருமை, பொறாமையாகிய தீக்குணங்களைக் களைந்தெறிந்து போட்டு, அவர்கள் மனத்தில் இளமையிலேயே உண்மை, அடக்கம், அன்பு ஆகிய நற்குணங்களை நாட்டுவது நலமும் அவசியமுமென உணரலானேன். இத்தகைய நற்குணங்களைக் கற்பிக்க உலகநீதி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய உசித நூல்கள் உதவலாமாயினும், முற்காலத்திற்போல இக்காலத்தில் அந்த நூல்களைப் பாடசாலைகளில் உபயோகிக்கக் காணப்படாததோடு, அவைகள் கத்தியரூபமாக விருத்தலின், சிறு பிள்ளைகள், தாமே படித்தும், அல்லது போதிக்கக் கேட்டும் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடிய வசன நடையில், அவர்கள் புத்திக்குச் சுலபத்தில் புலன்படக் கூடிய வகையில் உதாரணங்களைக் காட்டி வரையப்பட்ட நல்லொழுக்கப் பாட புத்தகம் ஒன்று அத்தியாவசியமெனக் கருதியே, இச்சிறு புத்தகத்தை ஒருவாறு எழுதத் துணிந்தேன்.

இதனை எலிமென்டரி பாடசாலையின் 4-வது வகுப்புக்குப் பாடபுத்தகமாக உபயோகிக்கலாமென்பது என் அபிப்பிராயம். ஆயினும், பாடசாலை அதிகாரிகள் தங்கள் தங்கள்

இடத்து மாணாக்கர்கள் தன்மைக்குத் தக்கவாறு அதற்கு ஒரு படி உயர்ந்த அல்லது தாழ்ந்த வகுப்புக்களிலும் உபயோகிக்கலாம். இப் புத்தகம் நான் கோரும் வண்ணம் சிறுவர்களுக்கு நன்மை பயக்குமாயின், அதுவே நான் கொண்ட இந்த சிறு முயற்சிக்கேற்ற கைம்மாறாகும்.

செங்கற்பட்டு,
20—1—26.

பீற்றர் அலூசியஸ்

உபாத்தியாயர்களுக்குக் குறிப்பு.

இப்புத்தகத்தில் அடங்கிய ஒவ்வொரு பாடத்தையும் சிறுவர்களுக்குப் போதிக்க ஆரம்பிக்கு முன், உபாத்தியாயர் அதைத் தாமே முந்தப் படித்து, அதில் வற்புறுத்தப்படும் நீதியானது அவர்கள் மனதில் நன்கு பதியுமாறு, அந்தந்தப் பாடத்தில் காணுங் கேள்விகளையே யன்றி வேறு கேள்விகளையும் தயார் செய்துகொண்டு, அவை மூலமாக அந் நீதியைப்போதிக்கவேண்டும். மேலும், அந் நீதியையும், அதைக் குறிக்கும் படத்தையும் பற்றிப் பிள்ளைகளையே ஒருவருக்கொருவர் கேள்வி கேட்கவும் செய்யலாம். இதனால் சிறுவர்களுக்கு உற்சாகமுண்டாகும்; விஷயத்தை நன்றாகக் கிரகிக்கவும் ஏதுவாகும். ஒவ்வொரு கதையைப்பற்றிய வேறு விவரங்களையும், அதைப் போன்ற வேறு கதைகளையுஞ் சொல்லி, சிறுவர்கள் மனத்தில் அதன் நீதி நன்கு பதியும்படி செய்யலாம். புத்தகத்தை முடித்தபின் மீளவும் அப்பாடங்களை அடுத்தடுத்துப் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தி, அவற்றில் கற்பிக்கப்பட்டுள்ள நீதிகளைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு வருவதால் அதிக பிரயோஜனம் கிடைக்கும். சுருக்கிச் சொல்லுமிடத்து, பிள்ளைகளிடத்தில் நற்குணங்கள் விருத்தியாகி, பிற்காலத்தில் அவர்கள் உத்தமர்களாய் ஒழுகவேண்டுமென்ற அக்கறையும் பொறுப்பும் கொண்டு உபாத்தியாயர்கள் உழைத்தல் வேண்டும்.

அட்டவணை.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள்	1
2.	திருட்டு	3
	வாய்மை	6
4.	கோபம்	8
5.	சாந்தம்	10
6.	உணவு	12
7.	மிதம்	14
8.	பொய்	16
9.	உண்மை	18
10.	பிடிவாதம்	20
11.	கீழ்ப்படிதல்	22
12.	சோம்பல்	24
13.	சுறுசுறுப்பு	26
14.	அசுத்தம்	28
15.	சுத்தம்	31
16.	பொறுமை	33
17.	பொருமை	36
18.	அடக்கம்	38
19.	ஜீவகாருண்யம்	40
20.	நல்ல மனிதனும், கெட்ட மனிதனும். ...	42

நல்லொழுக்கப் பாடங்கள்.



1. கடவுள்.

இந்தப் படத்திலுள்ள பையன் ஏன் முழங்காலிட்டுக் கை கூப்பிக் கொண்டிருக்கிறான்? இவன் கடவுளை நோக்கி ஜெபம் செய்கிறான். கடவுள் எங்கிருக்கிறார்? அவர் எங்கும் இருக்கிறார். பையன் ஜெபம் செய்யுமிடத்தில் இருக்கிறாரா? இருக்கிறார். அவரை ஏன் படத்தில் பார்க்க முடியவில்லை? அவருக்குச் சரீரம் கிடையாது.

அவர் ஆவியாக இருக்கிறார். ஆனதால் அவரை நம்மால் பார்க்கமுடியாது. அவருக்கு நாம் ஏன் ஜெபம் செய்ய வேண்டும்? அவர் நம்மை ஒன்றுமில்லாமையினின்று உண்டாக்கினார். அவர் எல்லா விஷயத்திலும் நம்மைக் காக்கிறார். இப்படி செய்வதினால் நாம் அவருக்கு என்ன செய்ய வேண்டும்? அவருடைய கட்டளைகளை அனுசரித்து, அவரைத் தோத்திரித்து, எப்பொழுதும் அவருக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும். நாம் சுகமாயிருக்கும்போதும், கஷ்டப்படும்போதும் அவரை நினைத்து ஜெபம் செய்யவேண்டும்.

முக்கியமாய் நாம் எப்பொழுது ஜெபம் செய்யவேண்டுமென்றால், சாப்பிடுவதற்கு முன்னும், பின்னும், படுக்கப் போவதற்கு முன்னும் செய்தல்வேண்டும். நம்முடைய அவசரங்களிலும் ஆபத்து வேளைகளிலும் கடவுளை நோக்கி ஜெபம் செய்தல்வேண்டும். இன்னும் மற்ற ஒழிந்த நேரங்களிலும் கடவுளைத் தியானம் செய்யவேண்டும். இப்படி செய்தால் கடவுள் நம்மீது இரங்கி, பட்சம்வைத்து நம்மைக் காப்பாற்றுவார். நமக்கு வேண்டியவைகளையெல்லாம் தடையின்றிக் கொடுப்பார். ஆகையால் பிள்ளைகளே! நீங்கள் எப்போதும் கடவுளைக்குறித்து ஸ்தோத்திரம் செய்யுங்கள். உங்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் அவரிடத்தில் கேட்டு மன்றாடுங்கள்.



2. திருட்டு.

இந்தப் படத்தைப் பார்! இதில் என்ன இருக்கிறது? ஒரு எலி இருக்கிறது. இன்னும் என்ன இருக்கிறது பார். ஒரு தட்டு நிறைய மிட்டாய் இருக்கிறது. அந்த எலி எங்கே போகிறது? அது அந்த மிட்டாயைத் தின்னப் போகிறது. அது யாருடைய மிட்டாய்? அது ஒரு பையனுடைய மிட்டாய்.

இந்த எலி அந்தப் பையனுடைய மிட்டாயைத் தின்னலாமா? கூடாது. என் கூடாது? ஏனென்றால், உன்னுடைய தின்பண்டத்தை ஒரு பையன் உன் சம்மதமின்றி எடுத்துத் தின்றால் அது உனக்குப் பிரியப்படுமா?

நமக்குச் சொந்தமில்லாத ஒரு பண்டத்தை அல்லது ஒரு பொருளை அதன் சொந்தக்காரர் உத்திரவில்லாமல் நாம் எடுத்துக் கொள்வது திருட்டு. அது கெட்டது. நல்ல பிள்ளைகள் அப்படி திருட்டு வேலை ஒன்றும் செய்ய மாட்டார்கள். ஆகையால், அந்த எலியானது தனக்குச் சொந்தமில்லாத அந்த மிட்டாயை எடுத்துச் சாப்பிடுவதால் அது என்ன காரியம் செய்கிறது? அது திருட்டுக் காரியம் செய்கிறது.

அப்படி திருடித் தின்னுவதினால் அந்த எலிக்கு என்ன நேரிடும்? அந்தச் செய்தி பையனுக்குத் தெரிந்ததும் அவன் ஒரு விசைக்கூடுவைத்து, எலியைப் பிடித்து அடித்துத் தொந்திரவு செய்வான். இதை அறியாத அந்த எலி அந்த மிட்டாயை எடுத்துத் தின்றுவிட்டு ஓடிப் போயிற்று. அதைக்கண்ட இந்தப் பையன் கூடுவைத்து, அந்த எலியைப் பிடித்து அடித்துக் கொன்று போட்டான்.

பிள்ளைகளே! அந்த எலி திருட்டுவேலை செய்ததினால் அதற்கு என்ன சம்பவித்ததென்று பார்த்தீர்களா! ஆகையினால், நீங்களும் பிறர் பொருளைத் திருடுவீர்களானால் எலி பட்ட பாடு படுவீர்கள். மேலும் உங்களுடன் படிக்கும் பிள்ளைகள், நீங்கள் திருடுவதை அறிந்தால், உங்களைத் திரு

டரென்று பரிகாசம் செய்வார்கள். அதன்பின், யாரும் உங்களை ஒருகாசுக்குக்கூட நம்பமாட்டார்கள். இது உங்களுக்குப் பெரிய வெட்கமான காரியமல்லவா?

ஆனபடியால், நீங்கள் ஒருபோதும் திருடவேகூடாது. அற்பப் பொருளா யிருந்தாலும், ஒரு சிறு பென்சில், அல்லது ஒரு துண்டு காகிதமா யிருந்தாலும் அதை நீங்கள் திருடப்படாது. அப்படி நடப்பீர்களானால் பார்ப்பவர்கள் எல்லோரும் உங்களை நல்ல பிள்ளைகள் என்று மெச்சுவார்கள்.



3. வாய்மை.

இந்தப் படத்தைப்பார். இதில் என்ன இருக்கிறது? பையன் என்ன செய்கிறான்? ஒரு பணப்பையை அந்த மனிதனிடம் கொடுக்கிறான். ஏன் கொடுக்கிறான்? அந்தப் பணப்பை அந்த மனிதனுடையது.

அந்தப் பையனுக்கு அந்தப் பணப்பை எப்படி கிடைத்தது? அதை அவன் தெருவில் கண்டெடுத்தான். அது அந்த மனிதனுடையதென்று பையனுக்கு எப்படித் தெரியும்? அந்த மனிதன் நடந்து வந்துகொண்டிருக்கும்போது, அவனுக்குத் தெரியாமல் அவனுடைய பணப்பை நழுவி கீழே விழுந்துவிட்டது. அதை அந்தப் பையன் பார்த்த

தினுல் எடுத்துக்கொண்டு வந்து அவனிடம் கொடுக்கிருன். பையன் ஏன் அந்தப்பணத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது? அவன் உண்மையான பையன். பிறருக்குச் சொந்தமானதை எடுத்துக் கொள்ளக்கூடாதென்று அவனுக்குத் தெரியும். ஆகையால், அதை அவன் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த மனிதன் பையனுடைய உண்மைத்தனத்தைக்கண்டு சந்தோஷப்பட்டு, அவனைத் தட்டிக்கொடுத்தான். உடனே பையனை அவன் தகப்பனுரிடம் அழைத்துக்கொண்டுபோய் நடந்ததையெல்லாம் அவரிடம் சொன்னுன். மேலும் அவரிடம் பத்து ரூபாய் கொடுத்து, பையனுக்கு ஒரு நல்ல பட்டுச் சட்டை தைத்துக் கொடுக்கும்படி சொன்னுன். பிள்ளைகளே! இந்தப் பையனுக்கு ஏன் இந்த வெகுமதி கிடைத்தது? இவன் உண்மையாக நடந்து கொண்டதினுல் கிடைத்தது. நீங்களும் அப்படிச்செய்தால், உங்களுக்கும் வெகுமதி கிடைக்கும். உங்களுடன் படிக்கும் பிள்ளைகளும் உங்களை நல்ல பிள்ளைகளென்று சொல்வார்கள். ஆகையால், நீங்கள் மற்றவருடைய பொருளை எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு வேளை தெரியாமல் எடுத்தாலும், உடனே அதற்குச் சொந்தக்காரரைத் தேடி அதை அவர்களிடம் சேர்த்துவிடல் வேண்டும்.

அப்படி செய்வதினுல் உங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும். உங்களை எல்லோரும் நம்புவார்கள்.



4. கோபம்.

இந்தப் படத்தில் என்ன இருக்கிறது? இரண்டு நாய்கள் ஒன்றுக்கொன்று எதிரே நின்றுகொண்டிருக்கின்றன. அவைகள் என்ன செய்கின்றன? ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றன. வலது பக்கத்திலிருக்கும் நாயின் உடலில் உனக்கு என்ன தெரிகிறது? சில பெரிய காயங்களும், அவைகளிலிருந்து இரத்தத் துளிகள் கீழே சிந்துவதுந் தெரிகின்றன. அந்தக் காயங்கள் இந்த நாய்க்கு எப்படி உண்டாயின? இடது பக்கத்தில் நிற்கும் பலமுள்ள பெரிய நாயானது இதன்மேல் விழுந்து கடித்து, இதற்குப் பெரிய காயங்களை உண்டு பண்ணிவிட்டது. ஏன் அது இப்படிச் செய்யவேண்டும்? அது நாய்

களின் சுபாவம். நாய்களின் சுபாவம் என்ன? கோபமும், சண்டையும் தான். நாய்களுக்குக் கோபம் அதிகமாயிருப்பதினுல் அவைகள் ஒன்றையொன்று கண்டவுடன் குரைத்து எதிர்த்துச் சண்டை போடாமல் போகமாட்டா. மேற் கண்ட இரண்டு நாய்களும் அப்படி கோபப்பட்டுச் சண்டை செய்ததால் என்ன நேரிட்டது? அதிக வலிவு இல்லாத சிறிய நாய்க்கு நல்ல காயம் ஏற்பட்டது.

பிள்ளைகளே! கோபத்தினுல் வந்த கஷ்டத்தைப் பார்த்தீர்களா! கோபம் பொல்லாது. கோபத்தினுல் சிறிய நாய்க்கு ஏற்பட்டதுபோல் காயங்கள் மாத்திரமல்ல, சில சமயங்களில் கொலைகளும் நேரிடும். கொலை செய்தவனுக்கு சிறைச்சாலைத் தண்டனையும், தூக்குமரத் தண்டனையும் கிடைக்கும்.

ஆதலால், நீங்கள் ஒருபோதும் கோபத்துக்கு இடம் கொடுக்காதீர்கள். சண்டை சச்சரவு செய்யாதீர்கள். உங்களுடன் எவனுவது வலிய சண்டைக்கு வந்தாலும், அவனுக்குப் பதில் வார்த்தை சொல்லாமல் மௌனமாய் வந்து விடுங்கள். "மௌனம் கலக நாஸ்தி". அதாவது, கோபமாய்ப் பேசுகிறவனிடத்தில் எதிர்த்துப் பேசாமலிருந்து விட்டால் கலகத்திற்கு வழியில்லை யென்பதே. "கடிவதுமற" "சுளிக்கச் சொல்லேல்" என்று ஔவையாரும் சொல்லியிருக்கிருர். இப்படி நீங்கள் செய்வீர்களேயானுல், உங்களுக்குப் பொல்லாங்கு ஒன்றும் வாராது. உங்களைப் பார்ப்பவர்களும் உங்களை நல்ல பிள்ளைகளென்று சொல்லுவார்கள்.

5. சாந்தம்.

இந்தப் படத்தில் என்ன இருக்கிறது? இரண்டு புறாக்கள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்தால் எப்படியிருக்கின்றன? அவை அழகாயிருக்கின்றன. மேலும், பொறுமையாகவும் சாந்தமாகவும் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன. அவைகள் சண்டைபோடுகின்றனவா? இல்லை. நீ எப்போதாவது மாடப்புறாக்கள் சண்டைபோடுவதைப் பார்த்திருக்கிறாயா? இல்லை.

ஏன் மாடப்புறாக்கள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொள்வதில்லை? ஏனென்றால், அவைகளுக்குக் கோபமே கிடையாது. கோபமுள்ளவர்கள்தான் சண்டைபோடுவது

வழக்கம். இந்த மாடப் புறாக்களுக்குக் கோபமேயில்லாத படியினால்தான் சண்டை போடுவதில்லை. மேலும், இவைகளிடத்தில் எப்போதும் சாந்தகுணம் குடி கொண்டிருக்கின்றது. சாந்தகுணம் இருக்கிறபடியால் எல்லோரும் இவைகளை வளர்க்கப் பிரியப்படுகிறார்கள்.

பிள்ளைகளே! மாடப் புறாக்களின் நல்ல குணத்தைப் பார்த்து, நீங்களும் அவைகளைப்போல் சாந்தமாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் எல்லோரும் உங்களை நேசிப்பார்கள். உங்களுக்கு ஒரு தீங்கும் வாராது.



6. உணவு.

மேலே காட்டியுள்ள படத்தின் இடது பக்கத்தில் என்ன பார்க்கிறாய்? ஒரு பையன் நிற்பதைப் பார்க்கிறேன். அவன் எப்படி யிருக்கிறான்? நல்ல சுகமும், சுறுசுறுப்புமுள்ள பையனைப்போல் இருக்கிறான். வலது பக்கத்தில் இருக்கிற பையன் என்ன செய்கிறான்? அவன் எதையோ அதிக ஆவலோடு மிகவும் வேகமாகச் சாப்பிடுகிறான். ஏன் அவன் அப்படிச் சாப்பிடுகிறான்? அவன் தின்பண்டங்களின் மேல் அதிக ஆவலுள்ளவனானபடியால் அப்படி செய்கிறான். அடிப்புறத்தில் இடது பக்கம் என்ன காண்கிறாய்? பெருவயிறும், விகார ரூபமுமுள்ள ஒரு பையன் நாற்காலி

யில் உட்கார்ந்திருக்கிறான். அவன் ஏன் அப்படி யிருக்கிறான்? அவன் மிதமிஞ்சி அதிகமாகச் சாப்பிட்டபடியால் அப்படியிருக்கிறான்.

கடைசிப் படத்தில் என்ன காணப்படுகிறது? ஒரு பையன் விசனத்துடன் படுத்துக்கொண்டிருக்கிறது போல் காணப்படுகிறது. அவன் ஏன் அவ்விதம் படுத்துக்கொண்டிருக்கிறானென்றால், அளவு கடந்து சாப்பிட்டுவிட்டபடியால் அவனுக்கு வயிற்று வலி வர, அதனால் அவன் அவஸ்தைப்படுகிறான். அவனுக்கு மருந்து கொடுக்க வைத்தியர் கை பார்க்கிறார்.

பிள்ளைகளே, முதல்பையன் எவ்வளவு சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறான் பார்த்தீர்களா! கடைசியாகக் கட்டிலின்மேல் படுத்திருக்கிறவனும் அதே பையன் தான். அங்கே அவன் எவ்வளவு விகாரமாகவும், கஷ்டப்பட்டுக் கொண்டும் இருக்கிறான் பாருங்கள். அவனுக்கு இந்தச் சங்கடம் எப்படி உண்டாயிற்று? சாப்பாட்டின் மேல் அதிக ஆசை கொண்டவனாய், அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டதினால் இப்படியாயிற்று. "அளவுக்கு மிஞ்சினால் அமுதமு நஞ்சு" என்று ஒரு பழமொழி யிருக்கிறது. "மீதூண் விரும்பேல்" என்று ஔவையாரும் படிப்பித்திருக்கிறார். ஆனபடியால், நீங்கள் அதிகமாகச் சாப்பிடக்கூடாது; சாப்பிடப் பிரியப்படவும் கூடாது. திட்டமாகச் சாப்பிடவேண்டும். அதாவது, அரைவயிறு சாதம், கால்வயிறு ஜலம் சாப்பிட்டு, மற்றக் கால் வயிற்றை காலியாக வைத்திருக்க வேண்டும். இப்படி செய்தால் வியாதி யொன்றும் வாராது, சுகமாய் ஜீவிக்கலாம்.



7. மிதம்.

இந்தப் படத்தில் இருப்பவர்களைப் பார்! இவர்கள் எப்படியிருக்கிறார்கள்? இவர்கள் எல்லோரும் சுகமாகவும், சந்தோஷமாகவும், அழகாகவும் இருக்கிறார்கள். முதலிலுள்ள பெரியவருக்கு வயது எவ்வளவுயிருக்கும்? சுமார் 80 இருக்கும். கடைசியிலிருக்கும் சிறிய பையனுக்கு எவ்வளவு வயது இருக்கும்? சுமார் 8 வயது இருக்கலாம். பையனுக்கும், அந்தப் பெரியவருக்கும் என்ன உறவு? பெரியவர் பையனுடைய பாட்டனார். படத்தில் நடுவில் இருப்பவர்கள் யாரென்றால், அவர்கள் அந்தப் பையனுடையவும், பெண்ணினுடையவும் தாயுந் தகப்பனுந்தான். இவர்கள் எதனால் சௌக்கியமாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறார்

கள்? இவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் மிதத்தை யனுசரிக்கிறதினால்தான். அதாவது:—இவர்கள் சாப்பாட்டு விஷயத்திலும், உறக்கம், உழைப்பு முதலிய மற்ற விஷயங்களிலும் மிதமாகவும், கண்டிப்பாகவும் நடந்துகொள்வார்கள்.

போஜனப்பிரியரைப்போல் அளவுக்கு மிஞ்சி சாப்பிடமாட்டார்கள். சோம்பேறிகளைப்போல் அதிக நேரம் தூங்கமாட்டார்கள். பேராசை பிடித்தவர்களைப்போல் இரவு பகல் என்று பாராமல், எந்நேரமும் உழைக்க மாட்டார்கள். மிதமாய் உண்டு, மிதமாய் உறங்கி, மிதமாய் உழைத்து, தேக சௌக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

பிள்ளைகளே! நீங்களும் அவர்களைப்போல் நடக்க வேண்டும். அதிகமாக சாப்பிடவே கூடாது. அதிகமாக விளையாடவும் கூடாது. அதிகமாகத் தூங்கவும் கூடாது. ஒவ்வொரு காரியத்தையும் மிதமாகவே செய்யவேண்டும். அப்படி செய்வதினால் நீங்கள் சௌக்கியமாகவும், அழகாகவும், சந்தோஷமாகவும், நெடுங்காலம் ஜீவித்திருக்கலாம்.



8. பொய்.

மேலேயிருக்கிற படத்தில் மூன்று பையன்கள் நின்று கொண்டிருக்கிறார்கள் அல்லவா? அவர்களுக்கு அருகாமையில் இருப்பவர் உபாத்தியாயர். அவர் என்ன செய்கிறார்? அவர் ஒரு பையனைப் பிரம்பினால் அடிக்கிறார். அவர் ஏன் அப்படி ஒரு பையனை மட்டும் அடிக்கவேண்டும்? அவன் ஒரு பெரிய பொய் சொன்னான். அவன் பொய் சொன்ன விஷயம் மற்ற பையன்களைக்கொண்டு விசாரணை செய்ததில் ருசுப்பிக்கப்பட்டதால், பொய் சொன்ன பையனை உபாத்தியாயர் தண்டிக்கிறார். பிள்ளைகளே! மேற்கண்ட பையன் பெரும் பொய்யைச் சொன்னபடியால் அவனுக்கு என்ன கிடைத்தது பார்த்தீர்களா? அவனுக்கு நல்ல தண்டனை

கிடைத்தது. மற்றப் பிள்ளைகளுக்கு எதிரே அடி வாங்கின படியால் அவனுக்குப் பெரிதும் வெட்கம் நேரிட்டது.

ஆனபடியால், நீங்கள் ஒருபோதும் பொய் சொல்லக் கூடாது. பொய் சொல்வீர்களானால், இந்தக் கெட்டப் பையனைப்போல அடிபட்டு அவமானம் அடைவீர்கள். மேலும் யாரும் உங்களை நம்பமாட்டார்கள்.

உள்ளதை இல்லையென்றும், இல்லாததை உண்டென்றும் சொல்வது பொய். ஒரு பொய் சொல்லப்போனால் அதை மறைக்க ஒன்பது பொய் சொல்லவேண்டி வரும். பொய் மிகவும் கெட்டது. "பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிட்டாது". இது பஞ்ச மாபாதகங்களில் ஒன்று. இது மற்றப் பாதகங்களுக்கெல்லாம் அஸ்திவாரம். நாம் பொய் பேசாமல் உண்மையே பேசப்பழகுவோமானால், மற்றெல்லாப் பாவங்களையும் வெகு சுலபத்தில் வென்று விடலாம்.

நல்ல பிள்ளைகள் என்று பெயரெடுக்கப் பிரியப்படுகிறவர்கள் முதல் முதல் பொய்யை விலக்கப் பிரயாசப்பட வேண்டும்.



9. உண்மை.

மேலேயிருக்கிற படத்தில் ஒரு உபாத்தியாயர் ஒரு பையனுக்கு ஏதோ ஒன்றைக் கொடுக்கிறார் பாருங்கள். அவர் அவனுக்கு என்ன கொடுக்கிறார்? படப்புஸ்தகம் ஒன்றைக் கொடுக்கிறார். ஏன் இந்தப் படப்புஸ்தகத்தைக் கொடுக்கிறார்? அவன் உண்மையைச் சொன்னபடியால் கொடுக்கிறார்.

பிள்ளைகளே! அந்தப் பையன் உண்மை பேசின விஷயத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்: இந்தப் பையன் தன் வகுப்பில் பாடம் நடக்கும்போது ஒரு பெரிய கூச்சல் போட்டான். உபாத்தியாயர் உள்ளபடி கூச்சலிட்டவன் இவனென்று தெரியாமல், வேறொரு பையன் கத்தினதாக

எண்ணி அவனை அடிக்கப்போனார். அப்போது இந்தப் படத்தில் இருக்கும் பையன் எழுந்து, தான் தானே சத்தம் போட்டதாக உண்மையை உரைத்ததுந் தவிர, குற்றமற்றவனைத் தண்டிக்க வேண்டாமென்றும், தானே தண்டனைக்கு உரியவனென்றும் சொன்னான்.

இந்தச் சமயம் மாத்திரமல்ல, பலதடவைகளிலும் இந்தப் பையன் பலவிஷயங்களில் உண்மையாக நடந்துகொண்டதை உபாத்தியாயர் கவனித்து வந்திருந்தபடியால், அவர் பையனுடைய உண்மைக்காக மிகவும் சந்தோஷப்பட்டு, தலைமை உபாத்தியாயரிடமிருந்து ஒரு படப்புஸ்தகத்தை வாங்கி அவனுக்கு வெகுமதியாகக் கொடுத்தார்.

பிள்ளைகளே! பையனுடைய உண்மைக்குணத்தைப் பார்த்தீர்களா? அவன் உண்மையைச் சொன்னதினால் அவனுக்கு நல்ல வெகுமதி கிடைத்தது. நீங்களும் அதேமாதிரி எப்போதும் உண்மையைப் பேசுவீர்களானால், உங்களுக்கும் நல்ல வெகுமதி கிடைக்கும். ஆதலால், நீங்கள் எப்போதும், எந்த விஷயத்திலும் சத்தியமே பேசுங்கள். அப்படி செய்வதினால் உங்களை எல்லோரும் நல்லவர்களென்று சொல்லிச் சந்தோஷப்படுவார்கள். உண்மையுள்ளவர்களைக் கடவுள் எப்போதும் ஆசீர்வதிப்பார்.



10. பிடிவாதம்.

இந்தப் படத்தில் இருப்பது என்ன பார்! ஒரு கழுதையை ஒரு மனிதன் அடிமேல் அடி அடிக்கிறான். ஏன் அவன் அதை அப்படி அடிக்கிறான்? அந்தக் கழுதையை அவன் வீட்டிற்கு ஓட்டினான்; அது போகாமல் அதேயிடத்தில் ஒட்டாரமாக நிற்கிறது. ஆதலால் அவன் அதை அப்படி அடிக்கிறான். அடிபட்ட பின்னவது அது நகருகிறதா? இல்லை. ஒரே பிடிவாதமாக முதுகை வளைத்துக்கொண்டு நின்ற விடத்தைவிட்டு கொஞ்சமும் நகராமல் அங்கேயே நிற்கிறது. இந்தக் கழுதை அப்படி நகராமல் அதே யிடத்தில் இருக்கலாமா? இருக்கக்கூடாது. ஏன் கூடாது? அது தனக்குத் தீனி கொடுத்துக் காப்பாற்று

கிற தன் யஜமானனுக்கு வேலை செய்யவேண்டும். அவன் இஷ்டப்படி போகவேண்டும். அது அப்படி செய்யாததினால் அது என்ன காரியம் செய்கிறது? அது பெரிய பிடிவாதம் செய்கிறது. அப்படிப் பிடிவாதம் செய்யலாமா? செய்யக் கூடாது. பிடிவாதம் செய்ததினால் அதற்கு என்ன நேரிட்டது? எஜமானன் கோபங்கொண்டு அதை ஒரு பெரிய கழியால் ஓங்கி, ஓங்கி அடித்தான்.

பிள்ளைகளே! அந்தக் கழுதை பிடிவாதம் செய்ததால் என்ன நேரிட்டது பார்த்தீர்களா! அதற்கு நல்ல அடி கிடைத்தது. நீங்கள் அம்மாதிரி பிடிவாதம் ஒருபோதும் செய்யவே கூடாது. அப்படிசெய்தால் உங்களுக்கு நல்ல அடி கிடைக்கும்; உங்களை எல்லோரும் கெட்ட பிள்ளைகளென்று சொல்லி அவமானப்படுத்துவார்கள். நல்ல பிள்ளைகள் ஒருபோதும் பிடிவாதம் செய்யமாட்டார்கள்.



11. கீழ்ப்படிதல்.

மேலேயிருக்கிற படத்தில் இரண்டு பிள்ளைகளையும், ஒரு பெரியவரையும் பார்க்கிறீர்கள் அல்லவா? அந்தப் பெரியவர் அவர்களுடைய தகப்பனார்; அவ்விரண்டுபேரும் அவருடைய பிள்ளைகள். ஒரு மாதகாலம் இந்தப் பிள்ளைகள் இருவரும் ஏதோ சண்டைபோட்டுக்கொண்டு ஒருவருடன் ஒருவர் பேசாமல் இருந்தார்கள். இதைத் தகப்பனார் பார்த்து அவர்களை விசாரித்ததில், இரண்டுபேரும் தப்பிதம் செய்ததாகக் கண்டுபிடித்தார்.

அவர் பெரியவனைப் பார்த்துச் சிறியவனிடத்தில் முதலில் பேசும்படி சொன்னார். அவன் பெரியவனா

யிருந்தபோதிலும் தன் தகப்பனார் சொல்லுக்குக் கீழ்ப் படிந்து, ஒரு தடையும் சொல்லாமல் அவர் சொன்னபடி தன் தம்பியுடன் பேசினான்.

பிள்ளைகளே! இந்தப் பையனுடைய நல்ல குணத் தைப் பார்த்தீர்களா! அவன் பெரியவனானதால் முதலில் பேச இஷ்டமில்லாதவனாயிருந்தான். ஆனாலும் தன் தக ப்பனாருக்குக் கீழ்ப்படிவது தன் கடமையென்று நினைத்து, அவர் சொல்லைத் தட்டாமல் உடனே தம்பியுடன் பேசினான். அப்படியே நீங்களும், உங்களுடைய தாய் தகப்பன் சொல் படி எப்போதும் நடக்க வேண்டும். அதுமாத்திரமல்ல, உங்களுடைய உபாத்தியாயர் சொல்படிக்கும் கீழ்ப் படிந்து நடக்கவேண்டும்.

" அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் "



12. சோம்பல்.

இந்தப் படத்திலுள்ள எருமைக்கடா என்ன செய்கிறது? தண்ணீரில் சும்மா படுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு ஒன்றும் வேலைகிடையாதா? வேலை உண்டு. பின் என் தண்ணீரில் படுத்துக்கொண்டிருக்கிறது? அது சோம்பேறித்தனங்கொண்டு படுத்துக்கொண்டிருக்கிறது.

சோம்பலாய் இருக்கலாமா? இருக்கக்கூடாது. என் கூடாது? "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்". சோம்பலாயிருந்தால் நிரம்பவும் கஷ்டம் வந்து சேரும். என்ன கஷ்டம் வந்து சேருமென்றால்: வியாதிவரும், தரித்திரம் வரும், சாப்பாடு கிட்டாது. சோம்பேறியை ஒருவரும்

மதிக்கவேமாட்டார்கள். அவன் பிணத்துக்கு ஒப்பாவான். "பணம் இல்லாதவன் பிணம்" என்றுஞ் சொல்லுகிறார்களே.

பிள்ளைகளே! சோம்பலால் வரும் கேடுகளைப் பாருங்கள். நீங்கள் அப்படி சோம்பலாய் இருக்கப்படாது. உங்களுடைய பாடங்களைச் சுறுசுறுப்பாய்ப் படிக்கவேண்டும். பெரியோரிட்ட வேலைகளையெல்லாம் அப்போதைக்கப்போது செய்து முடிக்கவேண்டும். அப்படி செய்தால் உங்களை ஒருபோதும் வியாதி அணுகாது; வறுமை வராது. நீங்கள் சௌக்கியமாயும், சந்தோஷமாயும், கௌரவமாயும் ஜீவிப்பீர்கள்.

R 9
1196
11/8059



13. சுறுசுறுப்பு.

மேலேயிருக்கும் படத்தில் என்ன பார்க்கிறீர்கள்? ஒரு பையன் உட்கார்ந்துகொண்டு படிக்கிறான். அவனுக்கு முன்பாக மூன்று புத்தகங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பையன் விடியற்காலம் சுறுசுறுப்பாய் எழுந்து படிக்கிறான். அப்படி படிப்பதால்தான் அவன் வகுப்பில் முதல் பையனாய் இருக்கின்றான். உபாத்தியாயர் அவன்மேல் மிகவும் பக்ஷமாயிருக்கிறார். மற்றப் பிள்ளைகளும் அவனிடம் மதிப்புகொண்டு, அவனை நேசிக்கிறார்கள். இவன் படிப்பில் மாத்திரமல்ல, இன்னும் மற்ற வீட்டு வேலைகளிலும் சுறுசுறுப்பாயிருந்து வேலைகளைச் சீக்கிரம் முடிப்பான்.

பிள்ளைகளே! நீங்களும் இந்தப் பையனைப்போல் சுறுசுறுப்புடன் அதிகாலையில் எழுந்து, உங்களுடைய பாடங்களைப் படிக்கவேண்டும். பிறகு பெரியோர் இடும் மற்ற வீட்டு வேலைகளையும், குறையின்றிச் செய்து முடிக்க வேண்டும். பாடசாலையிலும் பாடங்களைச் சோம்பலின்றிப் படிக்கவேண்டும். உபாத்தியாயர் சொல்வதையும் கவனிக்க வேண்டும். சாயங்காலவேளைகளில் மற்றப்பிள்ளைகளோடு சுறுசுறுப்பாய் விளையாடி, தேகப் பயிற்சி செய்தல் வேண்டும். இப்படி விடாமுயற்சியாய்ச் செய்வீர்களானால், நீங்கள் எப்போதும் வியாதியில்லாமல் சுகமாக ஜீவிக்கலாம். படிப்பிலும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து, கெட்டிக்காரனாகி பேரும் புகழும் அடையலாம். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"



14. அசுத்தம்.

இந்தப் பையன் எவ்வளவு அசங்கியமாய் இருக்கிறான் பார்? அவன் குடுமியைக் கட்டாமல் தொங்க விட்டுக்கொண்டு, தலைவிரிகோலமாயும், அழுக்குச் சட்டையைப் போட்டுக்கொண்டும் சாப்பிடுகிறான். சாதத்தைக் கீழே சிந்திக்கொண்டும், ஆடிக்கொண்டும், அலங்கோலமாகச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான். அவன் மூக்கில் சளி ஒழுகிக்கொண்டிருக்கிறது. அவன் இருக்கும் அறையும் பெருக்காமல் அசுத்தமாயிருக்கிறது. இவ்வளவு அசுத்தமாயிருக்கிறபடியால் அந்த அறையில் எலிகள் அங்குமிங்கும் ஓடித் திரிகின்றன. ஈக்கள் சாப்பாட்டையும், பையனையும், மொய்க்கின்றன. மேலும் அவன் பற்களைச் சரியாய்ச் சுத்

தம் செய்வதில்லை. அதனால் பற்கள் சொத்தை பிடித்துப் பல் நோய் உண்டாகிறது. அவன் தினந்தோறும் குளிக்காததினால் அவன் உடம்பில் அழுக்கு சேர்ந்து, சொறி சிரங்கு உண்டாகிறது. அவன் அழுக்குத் துணிகளை உடுப்பதினால் அவன் பேரில் துர்நாற்றம் வீசுகிறது அதையிட்டு அவன் அருகில்வர யாரும் அசங்கியப்படுகிறார்கள். அவன் தலையைச் சீவாமல் இருப்பதால் அதில் பேன் பிடித்து நாற்றம் உண்டாகிறது. இந்தப் பையன் இப்படியெல்லாம் அசுத்தமாயிருப்பதால் அவனை எல்லோரும் "அசுத்தப் பையா, கிட்டே வராதே, அப்புறம்போ" என்று விலக்கித் தள்ளுவார்கள். அவனோடு படிக்கிற பிள்ளைகள் அவன் கிட்ட சேரமாட்டார்கள். அவனை எப்போதும் தூர விலக்கி வைப்பார்கள்.

பிள்ளைகளே! சுத்தமாயிராமற் போனால், எவ்வளவு தொந்தரவுகள் நேரிடுகின்றனவென்று பாருங்கள். நீங்கள் இந்தப் பையனைப்போல் இருப்பீர்களானால், மேலே சொல்லப்பட்ட கஷ்டங்களையெல்லாம் அநுபவிக்க நேரிடும். ஆகையால், நீங்கள் அம்மாதிரி இராமல், காலையில் எழுந்தவுடன் பற்களை நன்றாய்த் துலக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். தலையைச் சீவி சுத்தமான உடை உடுத்தவேண்டும். பிரதிதினமும், உடம்பு குளித்து அதை நன்றாகக் கழுவிச் சுத்தமாக்கவேண்டும். படிக்கும் புஸ்தகங்களையும், உபயோகிக்கும் எழுது பலகை முதலிய சாமான்களையும் அழுக்குப்படாமல், கிழிக்காமல் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். இருக்கும், படிக்கும், சாப்பிடும் இடங்களில்

குப்பை தூசி முதலியவை ஒன்றுமில்லாமல் சுத்தமாய் இருக்கும்படி செய்துகொள்ளவேண்டும். இதுவே நல்ல பிள்ளைகள் நடந்துகொள்ளும் ஒழுங்கு. இப்படியே நீங்களும் செய்துவந்தால் உங்களைப்பார்க்கிற எல்லோரும் இவர்கள் நல்ல பிள்ளைகள், சுசிகரமான பிள்ளைகள் என்று சொல்லி உங்களை மெச்சுவார்கள், மதிப்பார்கள்.



15 சுத்தம்.

இப் படத்தில் காட்டியுள்ள பையன் என்ன செய்கின்றான் பார்? அவன் அதிகாலையில் எழுந்திருந்து ஸ்நானம் செய்கிறான். அவன் என் ஸ்நானம் செய்கிறானென்றால், அவன் சுத்தப்பிரியன். ஆகையால் சுத்தமாவதற்கு ஸ்நானம் செய்கிறான். குளிக்காவிட்டால் என்ன நேரிடும்? உடம்பில் அழுக்குச் சேர்ந்து சொறி சிரங்கு வரும்; அருவருப்பான நாற்றமுண்டாகும். இந்தப் படத்தில் இருக்கும் பையன் தினந்தோறும் குளிப்பதனால் அவன் சுத்தமாயிருக்கிறான். பிள்ளைகளே, நீங்கள் தினந்தோறும் அதிகாலையில் குளித்தால் மாத்திரம் போதாது. முதலில் பற்களை நன்றாகச் சுத்தம் செய்யவேண்டும்; பிறகு உங்களுடைய நகங்களி

ஊள்ள அழுக்கையெல்லாம் அறவே அகற்றவேண்டும். உடைகளையும் நன்றாகத் தோய்த்துச் சுத்தம் செய்து உபயோகிக்கவேண்டும். சுத்தமாயிருப்பதற்கு விலையுயர்ந்த உடுப்புக்கள் அவசியமில்லை. சாதாரண, சொற்ப விலையுள்ள வஸ்திரம், சட்டையாயிருந்தாலும் அவை சுத்தமாயிருந்தால் போதுமானது. "கந்தையானாலும் கசக்கிக்கட்டு" என்கிற வாக்கியத்தை கவனியுங்கள். ஒவ்வொரு நாளும் ஸ்நானம் செய்தவுடன் மறவாமல் தலையைச் சீவி ஒழுங்காக முடிபோடவேண்டும். இந்தப்படி நீங்கள் உடம்பைச் சுத்தமாக வைத்து, சுத்தமான உடை உடுத்து, சுத்தமான ஜலங் குடித்து, சுத்தமான ஆகாரம் சாப்பிட்டு வருவீர்களானால், உங்கள் தேக சுகங் கெடாது; வியாதி ஒன்றும் வாராது. அப்போது உங்களுக்குப் படிப்பும் நன்றாய் வரும்.



16 பொறாமை.

ஒரு கிராமத்தில் குடியானவர்கள் இருவர் ஒரே தெருவில் வசித்திருந்தார்கள். அதில் ஒருவன் பெயர் மாணிக்கம், மற்றவன் பெயர் முத்து. முந்தினவன் மிகவும் நல்ல குணமுடையவன்; மெய் வருந்தியுழைத்துப் பொருள்களைச் சம்பாதிப்பான். "பொருள் தனைப் போற்றிவாழ்" என்பதற்கொப்ப, தேடிய பொருள்களைச் சிரமத்துக்கு அஞ்சாமல் சீர்திருத்தி, அவைகளைப் பேணிப் பாராமரித்துப் பதின்மடங்கு விருத்தி செய்வான்.

முத்துவோ சோம்பேறி. அதனோடு பொறாமையும் பெரிதும் உடையவன். "அயல் வாழ்ந்தால் ஐந்து நாள்

பட்டினி கிடப்பான்" என்று சொல்வது இவனுக்கே தகும். ஆகவே, நாளடைவில் "முயற்சி திருவினையாக்கும்" என்றபடி தன் முயற்சியால் தீவிரத்தில் தனவந்தனான மாணிக்கத்தைப் பார்க்கப் பார்க்க, முத்துவுக்குப் பெருந்துயரம் உண்டாகும்.

அவன் பொருளை எவ்வாறு அழித்து அவனைத் தன்னினும் தரித்திரனாக்குவது என்பது இவனுக்குத் தீராக் கவலையாயிருந்தது. அதனால் இவன் ஊண் உறக்கமின்றிக் கவலைக் கடலிலாழ்ந்தான். ஒருநாள் இவ்வாறு யோசித்திருக்கையில் இவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது. அதன்படியே இவன் இரண்டு ஆள்களை வெளியூரிலிருந்து அழைப்பித்தான். அவர்களுக்குப் போதுமான இலஞ்சம் கொடுத்து, மாணிக்கத்தினுடைய வீட்டை இரவிலே தீயிட்டுக் கொளுத்திவிடும்படி அவர்களை ஏவினான்.

மாணிக்கத்தின் வீடும், முத்துவின் வீடும் ஒன்றையொன்று அடுத்திருந்தன. அத் தீச்செயலுக்குக் குறிக்கப்பட்ட தினத்தில், அரவமெல்லாம் அடங்கியபின் நள்ளிரவில் முத்துவின் ஆட்கள, மாணிக்கத்தின் வீட்டிற்கும், முத்துவின் வீட்டிற்கும் இருந்த வித்தியாசமான அடையாளங்களைச் சரியாகத் தெரிந்துகொள்ளாதவர்களாய், அவசரத்தில் முத்துவின் வீட்டிற்கே தீயிட்டனர். முத்துவின் வீடு தீப்பற்றி யெரியவே அவன் வெளியில் ஓடிவந்து, "தீ! தீ!! கோ, கோ" எனக் கூக்குரலிட்டான். இந்தக் கூக்குரலைக் கேட்டு அந்தத் தெருவாரெல்லாரும் எழுந்துவந்து, தீயை அவிக்கவேண்டிய எத்தனங்கள் செய்தபோதிலும், அதற்

குள் முத்துவின் வீடு முற்றிலும் எரிந்து நாசமாய்ப் போய் விட்டது. அந்தத் தெருவார் செய்த பிரயத்தனங்களெல்லாம், அடுத்தவீடாகிய மாணிக்கத்தின் வீட்டைத் தீப் பற்றிக் கொள்ளாமற் காப்பாற்றினவே தவிர முத்துவுக்கு யாதொரு சாதகமும் செய்யக்கூடாமற் போயின.

பிள்ளைகளே! "கெடுவான் கேடு நினைப்பான்" என்கிற முதுமொழி முத்துக்கே முழுதும் பலித்தது. வீட்டையிழந்த துயரத்தாலும், தன் பொறாமைக் கருத்து ஈடேறாமற் போயிற்றே என்கிற கவலையினாலும் அவன் மனமுடைந்து மிகவுங் கஷ்டப்பட்டான். அவன் எவ்வளவு துயரத்துடன் தலைமேற் கை வைத்துக்கொண்டு அழுகிறானென்று படத்தில் பாருங்கள். கடைசியாகப் பொறாமைக் குணம் படைத்த முத்து, பொறாமை காரணமாகவே வியாதிப்பட்டு, வீணே இறந்தொழிந்தான். ஆகையால், நாம் பொறாமைப் படக்கூடாது. கடவுள் நம்மை எந்த அந்தஸ்தில் வைத்திருக்கிறாரோ அதே நமக்குக் குபேரசம்பத்து எனக்கருதி, அதில் திருப்தியடைந்திருத்தல் வேண்டும்.

"போது மென்ற மனமே பொன் செய்யு மருந்து"

17. பெருமை.

இந்தப் படத்திலுள்ள மயிலைப்பார். அது என்ன செய்கிறது? அது தன் சிறகை விரித்து ஆடுகிறது. ஏன் இப்படி ஆடுகிறது? அங்கே தூரத்தில் நின்றுகொண் டிருக்கிற அந்த மனிதன் தன் அழகிய கலாபத்தைக் கண்டு வியந்து, தன்னைப் புகழவேண்டுமென்று ஆடுகின்றது. தனக்குத் தான் அவ்வளவு அழகான இறகுகள் இருக்கின்றனவென்று தன் பெருமையை அவனுக்குக் காட்டுகின்றது. இப்படி செய்வதினால் அது தற்பெருமை பாராட்டுகின்றதன்றோ?

இது பெருமை பாராட்டினதினால் என்ன நேரிட்டது பாருங்கள். படத்தில் காணப்படுகிற அந்த மனிதன் மயில்

இறகுகளின் அழகைப் பார்த்து, அவற்றில் ஒன்றிரண்டைப் பிடுங்கிக் கொள்ள ஆசைகொண்டு, அதைத் துரத்திப் பிடித்து, வருத்தி இறகுகளைப் பிடுங்கினான். பின்னும், அதைத் தன் வீட்டிற்குக் கொண்டுபோய் ஆடவைக்க எண்ணி, அப்படியே கொண்டு சென்று அதை ஒரு கூட்டில் அடைத்தான். கூட்டில் அடைக்கவே, அந்த மயில் மிகவும் விசனப்பட்டு மெலிந்து போயிற்று. அதனால் அது மறுபடியும் சிறகை விரித்து விளையாடவேயில்லை.

பிள்ளைகளே! அந்த மயிலுக்கு ஏன் இவ்வளவு கஷ்டம் நேர்ந்தது? அது தற்பெருமை கொண்டு சிறகை விரித்து ஆடி அகங்கரித்ததினால்தான். பிள்ளைகளே! அந்த மயில் பெருமை பாராட்டி அகங்காரங் கொள்ளாமல் அடக்கமாயிருந்திருந்தால், காட்டிலேயே தன்னிஷ்டப்படி ஆடியோடிப் பறந்து சந்தோஷமாய் இருக்கலாம்.

நமக்குள்ள அழகு, புத்தி, செல்வம், முதலியவைகளைப் பற்றி நாம் கொஞ்சமேனும் பெருமை பாராட்டிக் கொள்ளலாகாது. அப்படி செய்வது மதியீனம். ஏனெனில், அந்த அழகு, புத்தி, செல்வம் முதலியவற்றை நமக்குக் கொடுத்தவர் யார்? கடவுளே யன்றோ? ஞாயமாகக் கடவுளுக்குரிய பெருமையை நாம் அபகரித்துக் கொள்ளலாமா?

ஆகையால், நீங்கள் வீண்பெருமை பாராட்டக்கூடாது. அப்படி பாராட்டினால், உங்களுக்கும் மயிலுக்கு நேர்ந்த கஷ்டங்கள் வந்து சேரும்; எல்லாப் புகழ்ச்சி, பெருமைகளுக்கும் உரித்தானவராகிய கடவுளையும் அவமதித்தவர்களாவீர்கள்.

18. அடக்கம்.

இதோ படத்தில் இருக்கப்பட்ட பையனைப் பார். அவன் எப்படி காணப்படுகிறான்? அவன் அமைதி அடக்க முள்ளவனாகவும், புத்திசாலியாகவும், நன்றாகப் படிக்கிற பையனாகவும் காணப்படுகிறான். இந்தக் குணங்களெல்லாம் தன்னிடத்தில் இருக்கிறதென்று அவன் உன்னிடத்தில் சொன்னானா? இல்லை. அப்படியானால் உனக்கு அவனுடைய குணங்கள் எப்படித் தெரியும்? அவனுடைய முகஜாடை நடை யுடை பாவனைகளிலிருந்தே அவைகளை ஒருவாறு யூகித்துக்கொண்டேன்.

அவனுக்குள்ள நல்ல குணங்களை அவன் ஏன் மற்றொருவ ரிடம் சொல்லுகிறதில்லை. அவன் தற்பெருமை, சிலாக்கியம்

கர்வம் முதலிய துற்குணங்களில்லாத அடக்கமுள்ள பையன். ஆனபடியால், அவன் எவரிடத்தும் தன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்ளுகிறதில்லை. தான்தானே அப்படி மனதில் எண்ணிக்கொள்ளுகிறது மில்லை. மேலும், தனக்குள்ள அழகு, அடக்கம், புத்தி, படிப்பு முதலிய குணங்கள் கடவுள் அருளிய நன்கொடை யெனவும், தன்னுடையவை அல்ல எனவும், நன்ருக அறிந்தபடியினுல் அவன் அவ்வளவு அடக்கமாகவும் தாழ்மையாகவும் இருக்கிருன். இதுவுமன்றி, அவன் தன்னைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு மேலான குணமுடையவர்கள் உலகத்தில் அநேகர் இருக்கிருர்கள் என்றும் நம்புகின்ருன். அதனுலேயே அவனை அடக்கம் உடையவனென்று சொல்லலாம்.

பிள்ளைகளே! நீங்களும் இந்தச் சிறுவனைப்போல் அடக்கமாக இருக்கவேண்டும். நீங்கள் எவ்வளவு அழகாயிருந்தாலும் சரி, புத்திசாலியாகவும் இருந்தாலும் சரி, படித்தவனுகவும் இருந்தாலும் சரி, இவைகளைப்பற்றி மற்றவரிடம் சொல்லிப் புகழ்ந்துகொள்ளக்கூடாது. இவைகளெல்லாம் கடவுளிடமிருந்து உங்களுக்குக் கிடைத்தனவென்றும், உங்களுக்குச் சொந்தமானவை அல்லவென்றும் நன்ருக உணர்ந்து, அடக்கமாகவே என்றைக்கும் இருக்க வேண்டும்.

19. ஜீவகாருண்யம்.

இந்தப் படத்தில் இருக்கிற பையன் என்ன செய்கிறான்? அவன் ஒரு ஓணானைக் கல்லால் அடிக்கிறான். அந்த ஓணான் அவனை என்னசெய்தது? ஒன்றும் செய்யவில்லை. அப்படியானால் ஏன் அவன் அதை அடிக்கிறான்? அவன் கெட்ட பையன். ஜீவ ஜந்துக்களின்பேரில் இரக்கமில்லாதவன். ஆதலால், காரணமில்லாமல் அந்த வாயில்லாத ஜந்துவை அப்படி அடித்து வதைக்கிறான். கெட்ட பிள்ளைகள் எந்த வாயில்லாத ஜந்துக்களைப்பார்த்தாலும் அவைகளைக் காரணமில்லாமலே அடிக்கப்போவார்கள். அவைகளுக்கும் தங்களைப்போல் ஜீவனுண்டு, உணர்ச்சியுண்டு என்பதை அவர்கள் சிறிதும் சிந்திப்பதில்லை. நல்ல பிள்ளைகள் அப்படி ஜீவ வதை செய்யவே மாட்டார்கள்.

கெட்டபிள்ளைகள் தாம் வழியில் ஒருநாயைக் கண்டால் அதன்மேல் கல் எறிவார்கள், கன்றுக்குட்டியின் வாலை முறுக்கி அதை ஹிம்சிப்பார்கள்; கழுதையின் வால்களில் செத்தைகளைக் கட்டிக் கொளுத்தி விடுவதும் உண்டு. இப்படியெல்லாம் செய்வது கெட்ட பிள்ளைகளுக்கு மெத்தப் பிரியம். இப்படி செய்வதினால் இந்தப் பிள்ளைகளுக்கு ஒன்றும் நேரிடுவதில்லையா? நேரிடுவதும் உண்டு. நாய்களை அடித்தால், அவைகள் சிலவேளைகளில் இவர்களைக் கடித்து விடும். கன்றுக்குட்டிகள் அடிக்கிறவர்களைத் திரும்பி முட்டும். அவைகளின் எஜமானரும் அப்படிப்பட்ட பிள்ளைகளைப் பார்த்தால் நன்றாகப் புடைப்பார்கள்.

கழுதைகளை ஹிம்சித்தால் அவைகள் தங்கள் பின்னங் கால்களால் நன்றாய் உதைக்கும்; கடிக்கவும் செய்யும். இப்படியாக ஜீவவதை செய்பவர்களுக்குச் சிலவேளைகளில் துன்பம் நேரிடுவது ஒருபுறம் இருக்க, இவர்களுடைய சேஷ்டைகளைப் பார்ப்பவர்கள் இவர்களை "இரக்கமில்லாத பாபிகள்." என்று தூஷிப்பார்கள். இவர்களுக்குத் தேவ தண்டனையும் தப்பாது. ஜீவஹிம்சை கொடிய பாவம்.

ஆகையால், நீங்கள் வாயில்லாத ஜந்துக்களுக்கு ஒருபோதும் யாதொரு தொந்தரவும் செய்யாதீர்கள். அவைகளின்மேல் எப்போதும் இரக்கம் வையுங்கள். அவைகளை யாராவது வருத்தி ஹிம்சிப்பதைக் கண்டால், அதைத் தடுத்து அவைகளைக் காப்பாற்ற பிரயாசைப் படுங்கள். அப்படி வதை செய்கிறவர்களுக்கு நற்புத்தி கற்பியுங்கள். அப்போது கடவுள், உங்களை ஹிம்சிப்பவர்களிடமிருந்து உங்களை மீட்டுக் காப்பாற்றுவார்.

20. நல்ல மனிதனும், கெட்ட மனிதனும்.

பிள்ளைகளே! உங்களுக்கு வலது பக்கத்திலிருக்கும் மனிதனுடைய பெயர் என்ன தெரியுமா? அவன் பெயர் கரியன். அவன் எப்படியிருக்கிறான்? அவன் மிகவும் குரூர செயல்களையுடைய கொடிய ராக்ஷசனைப்போல் காணப்படுகிறான். அவனிடத்திலுள்ள கெட்ட குணங்கள் என்னவென்றால்:—திருட்டுத்தனம், கோபம், போஜனப் பிரியம்,

பொய், பிடிவாதம், சோம்பல், அசுத்தம் முதலியன வாகும். இந்தக் குணங்களெல்லாம் அவனிடத்திலிருக்கின்றபடியால், அவனை யென்னவென்று சொல்லலாம். அவனை மிகவும் கெட்ட மனிதன், கொடியன், அரக்கனென்றே சொல்ல வேண்டும்.

அந்தப் படத்திலிருக்கிற மற்றொருவனுடைய பெயர் செல்லன். அவனைப் பார்க்கும்போதே எவ்வளவு சாதுவாகக் காணப்படுகிறான் பாருங்கள்! அவனிடத்தில் விளங்குகிற குணங்கள் என்னவென்றால்:—உண்மை, சாந்தம், மிதபோஜனம், யோக்கியம், கீழ்ப்படிதல், சுறுசுறுப்பு, சுத்தம் முதலியன. இப்படிப்பட்ட உத்தம குணங்களையுடைய அவனை என்னவென்று சொல்லலாம்? நல்ல மனிதன், உத்தமன், சற்குணன் என்று சந்தேகமறச் சொல்லலாம்.

நீங்கள் யாரைப்போல் இருக்க விரும்புகிறீர்கள்? செல்லனைப்போல் நல்ல குணமுடையவர்களா யிருக்க விரும்புகிறீர்களல்லவோ? அவனைப்போல் நல்ல குணசாலிகளாயிருக்க வேண்டுமானால், அவனுடைய நல்ல வழக்கங்கள் ஒவ்வொன்றையும் தவறாமல் கண்டிப்பாக அநுசரிக்கப் பிரயாசைப் படவேண்டும். அதுவுமன்றி, உங்களிடத்தில் எதாவது கெட்ட குணங்கள் இருக்குமால் அவைகளை அறவே ஒழித்துவிட முயற்சி செய்யவேண்டும். அப்படிப் பிரயாசைப் படுவீர்களானால், நீங்கள் செல்லனைப் போலவே நல்லவனாவீர்கள். எல்லாரும் உங்களை விரும்புவார்கள்; கடவுளும் ஆசீர்வதிப்பார்.

14